**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் பாவனையில் உள்ள கிரயம் ரூபா 68.3 மில்லியனான மோட்டார் வாகனங்கள், கியரம் ரூபா 248.1 மில்லியன் தொகையான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் 43.6 மில்லியன் ஆன அலுவலக உபகரணங்கள் என்பன பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் பயன்தரு ஆயுட்காலம் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மீண்டும் மதிப்பீட்டை மேற்கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2009 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டியதாக ரூபா 6 மில்லியன் மீதி காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு நேரொத்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் அவ்வாறான மீதியொன்று காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவாக கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடன் அடிப்படையில் சேவை | இந்த கடன் மீதியை | கடன் மீதியை |

| | | |
|---|---|---|
| வழங்குதல் நிறுவனத்தின் கொள்கையாக இல்லாதிருந்த போதிலும் கடனுக்கு சேவை வழங்கியமையால் நிறுவனத்தில் ரூபா 38.4 மில்லியன் கடன்பட்டோர் மீதி 2009 முதல் 2021 வரை காணப்பட்டது. | அறவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அறவிடுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்றை ஈடுபடுத்துதல் வேண்டும். |

### 1.6.2 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தகாரர்களுக்கு முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | முற்பணம் தீர்க்கப்பட்டதும் உடனடியாக கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டுள்ள முற்பணத்தை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பெறுமதி ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 104(1)(அ), 104(3) மற்றும் 104(4) | 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 23 வாகன விபத்துக்களுக்குரிய நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 3 | நிதிப்பிரமாணம் 104 இன் படி பரீட்சிப்புக்களை விரைவாக முடிவுறுத்தி அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED12 ஆம் இலக்க | நிறுவனத்தால் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் | 2.6 | பொதுத் திறைசேரிக்கு செலவினப் பொறுப்பு ஏற்படாத | நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது பொதுத் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 9.12 ஆம் பந்தி | ஊழியர் காப்புறுதி மேவுகைக்காக செலவினங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | | வகையில் பணிக்கொடை பணத்திலிருந்து செலுத்துவதற்காக வைப்புச் செய்யப்பட்டுள்ள நிலையான வைப்பின் வட்டியிலிருந்து இந்த செலவினங்கள் செய்யப்படுகின்றது. | திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | செயல்நிமித்த உப கட்டுநிதியை பெற்ற உத்தியோகத்தர்கள் 61 சந்தர்ப்பங்களின் போது அவற்றை தீர்த்து வைப்பதற்காக 34 நாட்கள் முதல் 102 நாட்கள் வரை தாமதிக்கப்பட்டிருந்தது. | 1.8 | எதிர்காலத்தில் செலவினங்களை தீர்ப்பதில் உள்ள தாமதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.4.1 ஆம் பிரிவு | மாவட்ட அலுவலகங்களுக்காக வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொள்ளும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 23 | வாகனங்களை வழங்குவதற்கு முடியதிருக்குமாயின் நிறுவனத்தின் பணிகள் செயலிழந்து விடுகின்றமையின் காரணமாக காணப்பட்ட சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் வாகனங்களை பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தமை இதற்கு காரணமாக இருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 70,461,437 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 30,169,666 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 40,291,771 அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் மிகை ரூபா 5,546,761 இனாலும், மனித குடியேற்ற திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் மிகை ரூபா 7,948,571 இனாலும், கட்டிட ஆராய்ச்சி பிரிவின் மிகை 4,405,395 இனாலும், பூகோள தொழில்நுட்பவியல் மற்றும் பொறியியல் பிரிவின் மிகை ரூபா 6,379,365 இனாலும், சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவை பிரிவின் மிகை ரூபா 9,644,943 இனாலும், மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மிகை ரூபா 20,761,268 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்திற்காக சட்டரீதியான நிலைமையை வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட சட்டத்தின் வரைவு 2012 செப்தெம்பர் 10 ஆந் திகதி சட்ட வரைவு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது. | விரைவாக சட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கண்டி மாவட்ட அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கு 1500-2000 சதுர அடி அளவான கட்டிடமொன்று தேவையாக இருந்த போதிலும் மாதாந்தம் ரூபா 125,000 வாடகை செலுத்தி 06 வருட காலமாக 6,017 சதுர அடிக் கட்டிடமொன்று பெறப்பட்டிருந்தது. | கடந்த வருடத்தில் மண்சரிவு அபாய வரைபடமாக்கல் செயற்திட்டத்திற்காக (LHMP) கண்டி மாவட்டத்தில் தனியான அலுவலகமொன்று நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. எனினும் இந்த ஆண்டின் போது அந்த செயற்திட்ட அலுவலகத்தை மாவட்ட அலுவலகத்துடன் இணைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் | தேவைக்கு போதுமான கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அது 2022 மே மாதம் முதல் அமுல்படுத்தப்படுகின்றது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மண்சரிவு ஆய்விற்காக 11,972 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும் 4,770 விண்ணப்பங்கள் அல்லது கிடைத்த விண்ணப்பங்களில் 39.84 சதவீதமானவற்றிற்கான ஆய்வுகள் மேற்கொண்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கிடைத்த 11,972 விண்ணப்பங்களுக்கு இடையே முன்னுரிமையின் பிரகாரம் 7,202 விண்ணப்பங்களுக்குரிய அறிக்கை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய விண்ணப்பங்களுக்கிடையே கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஆராய்ச்சி அறிக்கைகளை தற்போது விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மண்சரிவு ஆய்வு விண்ணப்பத்திற்காக களப் பரிசோதனை மேற்கொண்டு விரைவாக பரிந்துரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சமூக அடிப்படையிலான ஆபத்துக்களை குறைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காகவும், மண்சரிவு அபாயங்களை இனங்காணும் முறைமைகளுக்காகவும் 2015 இல் கிடைக்கப் பெற்ற ரூபா 7.6 மில்லியன் தொகை மற்றும் மண்சரிவு அபாயங்களை குறைப்பதற்கான பிரிவிற்கு 2015 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 5 | இந்தப் பணத்தை பயன்படுத்துவதற்காக உரிய செயற்திட்டங்கள் 2022 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிதி ஏற்பாட்டினை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் என்பன 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | மண்சரிவு அபாயத்தை குறைக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான மீளாய்வாண்டின் ரூபா 150 மில்லியனில் ரூபா 101.35 மில்லியன் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 (Covid-19) தொற்றுநோய் நிலைமையினால் ஒப்பந்தங்களை கையளிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. மேலும் உரிய ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் போது மலபட்டாவ வேலைத் தளத்தில் ஏற்பட்டிருந்த பிரயோக ரீதியான கஷ்டம் மற்றும் நாட்டில் காணப்பட்ட மூலப்பொருள் பற்றாக்குறை என்பன செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | நிதிஏற்பாடு வழங்கப்பட்ட பணிகளுக்கிடையே நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் ஆய்வுகூட வசதிகளுடன் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் நிறுவனத்திற்கு கிடைக்கப் பெற்ற ரூபா 60 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 35.37 மில்லியன் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | களுத்துறை மாவட்ட செயலகத்தால் ஒதுக்கப்பட்டிருந்த நிலம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக களுததுறை மாவட்டத்தில் ஆய்வுகூடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | நிதிஏற்பாடு வழங்கப்பட்ட பணிகளில் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப பங்களிப்புடன் மிக ஆபத்தான வலயங்களில் வாழ்கின்ற நபர்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 14 மாவட்டங்களில் 1000 | தற்போது கட்டிடப் பொருட்களின் கூறுவிலைகள் மற்றும் ஊழியச் செலவினங்கள் உயர்வடைந்து செல்வதை கவனத்தில் கொண்டு காணப்படுகின்ற சந்தை விலையின் கீழ் வீடுகளை நிர்மாணிப்பதற்காக | நிதிஏற்பாடு வழங்கப்பட்ட பணிகளில் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குடும்பங்களுக்காக கிடைக்கப் பெற்ற நிதிஏற்பாடு ரூபா 32.85 மில்லியன் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு புதிய அமைச்சரவை பத்திரம் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சிற்கு அனுப்பபப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் 2022 ஆம் ஆண்டின் போது 35 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (உ) | மண்சரிவு பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக பொதுத்திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதிஏற்பாடுகளில் ரூபா 34.42 மில்லியன் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் இந்த திட்ட முறைமையின் சரியான தன்மையை களப் பரிசோதனைகள் மேற்கொண்டு உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நிதியேற்பாட்டை பயன்படுத்தி உரிய பணிகளை திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் சிரேஷ்ட நிலையில் 21 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. இதனிடையே பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி 2016 ஆம் ஆண்டிலிருந்தும், பணிப்பாளர் (மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் அனர்த்த முகாமைத்துவம்) பதவி 2018 ஆம் ஆண்டிலிருந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டன. மேலும் சிரேஷ்ட நிலையின் 03 பதவிகளான சிரேஷ்ட விஞ்ஞானி, விஞ்ஞானி, முகாமையாளர் (தொழில்நுட்ப / ஆய்வுகூட) என்ற பதவிகளிலும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 19 ஆக இருந்ததுடன் அது 03 வருட காலம் முதல் காணப்பட்டது. | எதிர்காலத்தில் ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஆட்சேர்ப்பு நடைமுறையில் காண்பிக்கப் பட்டுள்ள தகைமையின் பிரகாரம் ஊழியர்களை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |